*1*

# பரிசுத்த ஆவியானவர் யாராக இருக்கின்றார்?

*"நான் பிதாவை வேண்டிக்கொள்ளுவேன், அப்பொழுது என்றென்றைக்கும், உங்களுடனேகூட இருக்கும்படிக்குச் சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார். உலகம் அந்தச் சத்திய ஆவியானவரைக் காணாமலும் அறியாமலும், இருக்கிறபடியால் அவரைப் பெற்றுக்கொள்ள மாட்டாது, அவர் உங்களுடனே வாசம்பண்ணி உங்களுக்குள்ளே இருப்பதால், நீங்கள் அவரை அறிவீர்கள். நான் உங்களைத் திக்கற்றவர்களாகவிடேன், உங்களிடத்தில் வருவேன்" (யோவா. 14:16-18).*

"பரிசுத்த ஆவியானவர் என்பது என்ன?" என்பதல்ல, மாறாக "பரிசுத்த ஆவியானவர் யாராக இருக்கின்றார்?" என்பதே கேள்வியாக உள்ளது. பரிசுத்த ஆவியானவர் என்பவர் ஒரு ஜீவியாக, ஆளுமைத் தன்மையுடன் கூடிய ஒரு நபராக இருக்கின்ற காணத்தினால் இது கேள்வியாக உள்ளது. அவர் ஒரு சக்தி அல்லது ஒரு வல்லமை என்பதை விடவும் அதிகமானவராக இருக்கின்றார்; அவர் பரலோகத்திற்குரிய ஜீவனுள்ள நபராக இருக்கின்றார்.

## அவர் ஒரு "ஆவி"யாக இருக்கின்றார்

*Ruach* என்ற எபிரெய வார்த்தை "ஆவி," "காற்று," மற்றும் "சுவாசம்," இன்னும் "தேவனுடைய ஆவி" என்றும் கூட பழைய ஏற்பாட்டில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. இதற்குச் சமமான கிரேக்க வார்த்தையான *pneuma* என்பது, புதிய ஏற்பாட்டில் மனிதருடைய ஆவி (1 கொரி. 2:11; நீதி. 20:27ஐயும் காணவும்) அல்லது தேவன் (யோவா. 4:24) மற்றும் தூதர்கள் (எபி. 1:13, 14) போன்ற தெய்வீக ஜீவிகளைக் குறிப்பிடும் வகையில் "ஆவி" என்று பயன்படுத்தப்படுகிறது. சில வேளைகளில் "ஆவி" என்ற வார்த்தை யானது தேவனுக்கு முன்பாக நின்றுகொண்டு அவரிடத்தில் பேசிய ஆவியைக் குறிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது (1 இரா. 22:21). " 'ஆவி' என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள *ruach* மற்றும் *pneuma* என்ற எபிரெய மற்றும் கிரேக்க வார்த்தைகள், நேர்ப்பொருளில் 'காற்று, சுவாசம்' என்றே அர்த்தப்படுகின்றன. இவ்விரண்டு வார்த்தைகளுமே உயிருள்ள ஜீவிகளின், விசேஷமாக தேவன் மற்றும் மனிதன் ஆகியோரில் உள்ள காணப்படாத உண்மை நிலையைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளன."[1]

*புதிய ஏற்பாட்டில் pneuma என்ற வார்த்தை வரும் எல்லா இடங்களிலும் இது "ஆவி" என்றே மொழிபெயர்க்கப்பட்டுள்ளது - இதற்கு விதிவிலக்காக யோவான் 3:8 உள்ளது, இவ்விடத்தில் இது பெரும்பாலான மொழிபெயர்ப்புகளில் "காற்று" என்றுள்ளது. இங்கும் கூட, "ஆவி" என்பது விரும்பித் தேர்ந்து கொள்ளப்படக்கூடியதாக உள்ளது. ஜேம்ஸ் ஆலிவர் புஸ்வெல் Jr., அவர்கள் இவ்வசனத்தைப் பற்றி, "குறைந்தது ஒரு வசனப் பகுதியில் (யோவா. 3:8) விளக்கம் சந்தேகத்திற்குரியதாக உள்ளது, ஆனால் இவ்வசனத்தை, 'ஆவியானவர் தாம் தேர்ந்துகொள்ளும் இடத்தில் சுவாசிக்கின்றார் …' என்று இன்னும் சிறப்பாக மொழிபெயர்த்திருக்கலாம் …"[2] என்று கூறியிருக்கிறார்.*

Guy N. Woods *அவர்கள் பின்வருமாறு எழுதினார்:*

> *Pneuma (ஆவி) என்ற வார்த்தையானது கிரேக்கப் புதிய ஏற்பாட்டில் பல நூற்றுக்கணக்கான முறைகள் வருகிறது. வேறு எந்த இடத்திலும் மொழிபெயர்ப்புக்களின் தர அளவை இதை காற்று என்று தரவழைப்பதில்லை. இவ்வசனப்பகுதியில் இது இருமுறை வருகிறது மற்றும் முதல் வினைத்தொடரில் இது 'காற்று' என்றும் இறுதி வினைத் தொடரில் இது 'ஆவி' என்றும் தரவழைக்கப்பட்டுள்ளது. முதல் வினைத் தொடரை, 'காற்றானது … வீசுகிறது' என்று ஒலி பெயர்த்தலைப் போன்றே, இறுதி வினைத் தொடரை 'காற்றினால் பிறந்தவனெவனோ அவனும் அப்படியே இருக்கிறான்' என்று தரவழைத்தலானது மிகவும் சரியற்றதாக இராது. …"[3]*

*ஆவி என்பது தேவன் நமக்குள்ளாக வைத்துள்ள அவரது இயல்பின் உள்ளான [தீப்]பொறியாக இருக்கலாம் (சக. 12:1; பிர. 12:7) மற்றும் இது மரணத்தின்போது பிரிகிறது (பிர. 12:7; யாக். 2:26). இது ஒரு எண்ணப்போக்காக இருக்கலாம் (ரோமர் 8:15; 1 கொரி. 4:21; கலா. 6:1) அல்லது உடல் சாராத ஜீவியாக இருக்கலாம் (எபே. 2:2; 2 தெச. 2:2). ஆவியின் உடல் சாராத இயல்பை இயேசு சுட்டிக்காண்பித்தார்: "நான்தான் என்று அறியும்படி, என் கைகளையும் என் கால்களையும் பாருங்கள், என்னைத் தொட்டுப் பாருங்கள், நீங்கள் காண்கிறபடி, எனக்கு மாம்சமும் எலும்புகளும் உண்டாயிருக்கிறதுபோல ஒரு ஆவிக்கு இராதே" (லூக். 24:39). தேவன் போன்ற ஒரு ஆவியாயிருப்பவர் (யோவா. 4:24), மனிதக் கண்களினால் காணப்பட முடியாதவராக இருக்கின்றார் (1 தீமோ. 6:16) ஏனென்றால் ஆவிகள் ஆவிக்குரிய பரிமாணத்தில், உலகம் சாராத பரிமாணத்தில் இருக்கின்றனர் (2 கொரி. 4:18). தேவ தூதர்கள் நல்ல ஆவிகளாகவும் (எபி. 1:13, 14), பிசாசின் தூதர்கள் பொல்லாத ஆவிகளாகவும் [இவர்கள் அசுத்த ஆவிகள் என்றும் அறியப்பட்டுள்ளனர்; மாற். 5:2, 15] உள்ளனர் (மத். 25:41).*

## அவர் ஒரு "நபராக" இருக்கின்றார்

*வேதாகமத்தில் கிடைக்கும் எல்லா தகவல்களும், பரிசுத்த ஆவியானவர் ஒரு தெய்வீகமான நபராக இருக்கின்றார் என்ற உண்மையைச் சுட்டிக்*

*காண்பிக்கிறது. அவர் பிதா மற்றும் குமாரன் ஆகியவர்களை போலவே அதே தனிப்பட்ட பண்புகளைக் கொண்டுள்ளார்.*

**ஒரு நபரின் பண்புகள்**

*பரிசுத்த ஆவியானவரின் பண்புகள், அவர் வெறும் ஒரு சக்தியாக மாத்திரமல்ல, ஆனால் உயிருள்ள ஒரு நபராக, ஒரு தனிநபராக இருக்கின்றார் என்பதைச் சுட்டிக்காண்பிக்கின்றன:*

1. *நியாயந்தீர்த்தல்: "பரிசுத்த ஆவிக்கும் எங்களுக்கும் நலமாகக் கண்டது" (அப். 15:29அ).*
2. *சிந்தை: "இருதயங்களை ஆராய்ந்து பார்க்கிறவர் ஆவியின் சிந்தை இன்னதென்று அறிவார்" (ரோமர் 8:27ஆ).*
3. *சித்தம்: "இவைகளையெல்லாம் அந்த ஒரே ஆவியானவர் நடப்பித்து, தமது சித்தத்தின்படியே அவனவனுக்குப் பகிர்ந்து கொடுக்கிறார்" (1 கொரி. 12:11). எபிரெயர் 2:4ன்-படி, பரிசுத்த ஆவியானவரின் வரங்கள் தேவனுடைய சித்தத்தின்படி பகிர்ந்தளிக்கப்படுகின்றன.*
4. *அறிவு: "தேவனுடைய ஆவியேயன்றி, ஒருவனும் தேவனுக் குரியவைகளை அறியமாட்டான்" (1 கொரி. 2:11ஆ).*
5. *உணர்வுகள் (அன்பு, துக்கம், சந்தோஷம்): "நீங்கள் தேவனை நோக்கிச் செய்யும் ஜெபங்களில், நான் போராடுவதுபோல நீங்களும் என்னோடுகூடப் போராட வேண்டுமென்று நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினிமித்தமும், ஆவியானவருடைய அன்பினிமித்தமும், உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்" (ரோமர் 15:32). "அன்றியும், நீங்கள் மீட்கப்படும் நாளுக்கென்று முத்திரையாகப் பெற்ற தேவனு டைய பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்தாதிருங்கள்" (எபே. 4:30). "நீங்கள் மிகுந்த உபத்திரவத்திலே, பரிசுத்த ஆவியின் சந்தோஷத்தோடே, திருவசனத்தை ஏற்றுக் கொண்டு, எங்களையும் கர்த்தரையும் பின்பற்றுகிறவர்களாகி" (1 தெச. 1:6).*

*பரிசுத்த ஆவியானவர் இந்தப் பண்புகளைக் கொண்டுள்ளார் என்ற உண்மையானது, அவர் ஒரு நபராக இருக்கின்றார் என்பதை வெளிப் படுத்துகிறது.*

**ஒரு நபரின் செயல்பாடுகள்**

*பரிசுத்த ஆவியானவர் வெறுமனே ஒரு சக்தி என்ற வகையில் மாத்திர மல்ல, ஒரு நபர் என்ற வகையில் செயல்படுகின்றார். அவரால் பின்வருப வற்றைச் செய்ய முடியும்:*

1. *போதித்தல் மற்றும் நினைப்பூட்டுதல்: "என் நாமத்தினாலே பிதா அனுப்பப்போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே*

*எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து, நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார்" (யோவா. 14:26).*

2. *சாட்சி கொடுத்தல்: "பிதாவினிடத்திலிருந்து நான் உங்களுக்கு அனுப்பப்போகிறவரும், பிதாவினிடத்திலிருந்து புறப்படுகிறவருமாகிய சத்திய ஆவியான தேற்றரவாளன் வரும்போது, அவர் என்னைக் குறித்துச் சாட்சி கொடுப்பார்" (யோவா. 15:26).*
3. *சத்தியத்திற்குள் நடத்துதல்: "சத்திய ஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்" (யோவா. 16:13அ).*
4. *பேசுதல்: "அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல்," (யோவா. 16:13ஆ; அப். 8:29; 11:12; 1 தீமோ. 4:1ஐயும் காணவும்).*
5. *கேள்விப்படுதல்: "தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ்சொல்லி," (யோவா. 16:13இ).*
6. *அறிவித்தல்: "வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார்" (யோவா. 16:13ஈ).*
7. *தடை செய்தல்: "அவர்கள் பிரிகியா கலாத்தியா நாடுகளைக் கடந்து போனபோது, ஆசியாவிலே வசனத்தைச் சொல்லாதபடிக்குப் பரிசுத்த ஆவியினாலே தடைபண்ணப்பட்டு," (அப். 16:6).*
8. *ஜீவனைக் கொடுத்தல்: "அன்றியும் இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவருடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பினவர் உங்களில் வாசமாயிருக்கிற தம்முடைய ஆவியினாலே சாவுக்கேதுவான உங்கள் சரீரங்களையும் உயிர்ப்பிப்பார்" (ரோமர் 8:11ஆ).*
9. *வெளிப்படுத்துதல்: "நமக்கோ தேவன் அவைகளைத் தமது ஆவியினாலே வெளிப்படுத்தினார்" (1 கொரி. 2:10அ; எபே. 3:3-5ஐயும் காணவும்).*
10. *ஆராய்தல்: "அந்த ஆவியானவர் எல்லாவற்றையும், தேவனுடைய ஆழங்களையும், ஆராய்ந்திருக்கிறார்" (1 கொரி. 2:10ஆ).*
11. *வாக்குத்தத்தம் செய்தல்: "ஆபிரகாமுக்கு உண்டான ஆசீர்வாதம் கிறிஸ்து இயேசுவினால் புறஜாதிகளுக்கு வரும்படியாகவும், ஆவியைக் குறித்துச் சொல்லப்பட்ட வாக்குத்தத்தத்தை நாம் விசுவாசத்தினாலே பெறும்படியாகவும் இப்படியாயிற்று" (கலா. 3:14; அப். 2:33ஐயும் காணவும்).*
12. *ஐக்கியம் கொள்ளுதல்: "கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய கிருபையும், தேவனுடைய அன்பும், பரிசுத்த ஆவியினுடைய ஐக்கியமும், உங்கள் அனைவரோடுங்கூட இருப்பதாக" (2 கொரி. 13:14; பிலி. 2:1ஐயும் காணவும்).*
13. *வேண்டுதல் செய்தல்: "... ஆவியானவர் தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல் செய்கிறார்; ... தேவனு*

*டைய சித்தத்தின்படியே பரிசுத்தவான்களுக்காக வேண்டுதல் செய்கிறபடியால் ...” (ரோமர் 8:26, 27).*

14. *குறித்தல் மற்றும் முன்னறிவித்தல்: “கிறிஸ்துவின் ஆவியானவர் கிறிஸ்துவுக்கு உண்டாகும் பாடுகளையும், அவைகளுக்குப் பின்வரும் மகிமைகளையும் முன்னறிவித்தபோது இன்ன காலத்தைக் குறித்தாரென்பதையும்” (1 பேது. 1:11).*
15. *அழைத்தல்: “ஆவியும் மணவாட்டியும் வா என்கிறார்கள்” (வெளி. 22:17அ).*
16. *நடத்துதல்: “இயேசு பரிசுத்த ஆவியினாலே நிறைந்தவராய் யோர்தானை விட்டுத் திரும்பி, ஆவியானவராலே வனாந்தரத்திற்குக் கொண்டுபோகப்பட்டு” (லூக். 4:1); “மேலும் எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள்” (ரோமர் 8:14).*

*ஒரு நபர் இந்த செயல்கள் யாவற்றிலும் ஈடுபட முடியும், ஆனால் ஒரு சக்தியால் அவ்வாறு ஈடுபட முடியாது. இவ்விதமாக, பரிசுத்த ஆவியானவர் ஒரு நபராகவே காணப்பட வேண்டும்.*

**அவர் தவறாக நடத்தப்படக்கூடும்**

*பரிசுத்த ஆவியானவரை இலேசாக நினைப்பதற்கும் காயப்படுத்துவதற்கும் பயன்படுத்தப்பட்டுள்ள வார்த்தைகள், உயிரற்ற வல்லமை அல்லது சக்தி என்பவற்றிற்கு எதிராக அல்ல, ஆனால் ஒரு நபருக்கு எதிராகச் செய்யப்பட்ட தவறான நடக்கையுடன் இணைவு பெற்றவைகளாகவே உள்ளன. அவர் இவ்விதமான வழிகளில் தவறுக நடத்தப்படக் கூடும்:*

1. *தூஷணம் கூறுதல்: “... ஆவியானவருக்கு விரோதமான தூஷணமோ மனுஷருக்கு மன்னிக்கப்படுவதில்லை ... எவனாகிலும் பரிசுத்த ஆவிக்கு விரோதமாகப் பேசினால் அது இம்மையிலும் மறுமையிலும் அவனுக்கு மன்னிக்கப்படுவதில்லை” (மத். 12:31, 32).*
2. *பொய் சொல்லுதல்: “பேதுரு, அவனை நோக்கி: ‘அனனியாவே, ... பரிசுத்த ஆவியினிடத்தில் பொய் சொல்லும்படி, சாத்தான் உன் இருதயத்தை நிரப்பினதென்ன?’ என்று கூறினார்” (அப். 5:3அ).*
3. *எதிர்த்து நிற்குதல்: “வணங்காக் கழுத்துள்ளவர்களே, இருதயத்திலும் செவிகளிலும் விருத்தசேதனம் பெறாதவர்களே, உங்கள் பிதாக்களைப் போல நீங்களும் பரிசுத்த ஆவிக்கு எப்பொழுதும் எதிர்த்து நிற்கிறீர்கள்” (அப். 7:51).*
4. *துக்கப்படுத்துதல்: “அன்றியும், நீங்கள் மீட்கப்படும் நாளுக்கென்று முத்திரையாகப் பெற்ற தேவனுடைய பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்தாதிருங்கள்” (எபே. 4:30).*
5. *நிந்தித்தல் அல்லது பழித்தல்: “... கிருபையின் ஆவியை நிந்திக்கிறவன் ...” (எபி. 10:29).*
6. *அவித்துப்போடுதல்: “ஆவியை அவித்துப்போடாதிருங்கள்” (1 தெச. 5:19).*

*பரிசுத்த ஆவியானவர் எவ்வாறெல்லாம் தவறாக நடத்தப்படக்கூடும் என்பதைப் பற்றி உரைக்கப்பட்ட கூற்றுகள், அவர் ஒரு நபராக இருக்கின் றார் என்று சுட்டிக்காண்பிக்கின்றன. வல்லமைகள் அல்லது சக்திகளைத் தவறாக நடத்தும் செயல்கள், கவிதைத்துவ அல்லது உருவக சந்தர்ப்பப் பொருள் தவிர, வழக்கமாக மேற்கண்ட வகையில் விவரிக்கப்படுவதில்லை. இவ்வசனங்களின் சந்தர்ப்பப் பொருள்கள், இவற்றின் மொழிநடை உருவகமாக உள்ளதாகச் சுட்டிக்காண்பிப்பதில்லை.*

***அவர் தனியாக இருக்கும் நிலையைக் கொண்டுள்ளார்***

*பரிசுத்த ஆவியானவர் பிதாவோடும் குமாரனோடும் அவர்களின் இயல்பு மற்றும் பண்பு ஆகியவற்றைக் கொண்டுள்ளதாகக் குறிப்பிடப் பட்டுள்ளதுடன், அவர் தமது தனிச்சிறந்த மற்றும் தனியான இருத்தல் நிலையைக் கொண்டுள்ளார் என்றும் குறிப்பிடப்பட்டுள்ள விஷயமானது, பரிசுத்த ஆவியானவர் ஒரு நபராக இருக்கின்றார் என்பதற்கான இன்னொரு சுட்டிக்காண்பித்தலாக உள்ளது.*

*இயேசு ஞானஸ்நானம் பெற்றபோது பரிசுத்த ஆவியானவர் அவர்மீது இறங்கி வந்தார் என்று குறிப்பிடப்பட்டுள்ளார் (யோவா. 1:33). குமாரன் ஞானஸ்நானம் பெற்றுத் தண்ணீரில் இருந்து கரையேறினபோது, இயேசுவின்மீது ஆவியானவர் இறங்கி வந்தார், மற்றும் பிதாவானவர் வானத்திலிருந்து பேசினார் (மத். 3:16, 17; லூக். 3:21, 22). பிதாவானவர் பரலோகத்தில் நிலைத்திருந்தார்; குமாரனானவர் பூமியில் நிலைத்திருந்தார்; ஆவியானவர் இயேசுவுடன் வாசம்பண்ண வந்தார்.*

*ஒரு நபர் இயேசுவுக்கு எதிராகத் தீமையானவற்றைப் பேசி, மன்னிக்கப் பட முடியும் - ஆனால் அவர் பரிசுத்த ஆவிக்கு எதிராகப் பேசினால் மன்னிக்கப்பட முடியாது (மத். 12:32). இயேசுவும் பரிசுத்த ஆவியானவரும் ஒரே நபராயிருந்தால், ஒருவர் இயேசுவுக்கு எதிராகவும் அதே வேளையில் பரிசுத்த ஆவிக்கு எதிராக இல்லாமலும் இருக்க முடிவது எவ்வாறு? இந்த போதனையைக் கொடுத்ததில் இயேசு, தங்களுடைய தனித் தனித் தன்மையை உணர்ந்து அறிந்திருக்க வேண்டும்.*

*மற்றவர்கள் [சிலர்] பரிசுத்த ஆவியானவரால் நிறைந்திருந்தது போலவே (அப். 6:3, 5; 7:55; 11:24) இயேசுவும் பரிசுத்த ஆவியானவரால் நிறைந்திருந்ததாகக் கூறப்பட்டார் (லூக். 4:1). அப். நடபடிகள் புத்தகத்தின் இவ்விஷயங்களில், பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்பட்ட மனிதர்கள் பரிசுத்த ஆவி என்ற நபராயிருந்ததில்லை என்று எல்லாரும் ஒப்புக் கொள்வார்கள் என்பது நிச்சயம். இயேசுவும் பரிசுத்த ஆவியானவரும் கூட, வித்தியாசப்பட்ட தனித்தனி ஜீவிகள் என்பது உணர்ந்தறியப்பட வேண்டும்.*

*இயேசுவே பரிசுத்த ஆவியானவராக இருக்கின்றார் என்று சிலர் நம்பு கின்றனர். இருப்பினும், இயேசு மரியாளிடத்தில் பிறக்கும் முன்பாகவே பரிசுத்த ஆவியானவர் உலகத்தில் இருந்தார். யோவான் "தன் தாயின் வயிற்றிலிருக்கும்போதே" அவருக்குள் பரிசுத்த ஆவியானவர் இருந்தார் (லூக். 1:15). இது மரியாள் பரிசுத்த ஆவியின் மூலம் இயேசுவைக் கர்ப்பந்*

*தரிப்பதற்குச் சுமார் ஆறு மாதங்களுக்கு முன்பாக நடந்திருந்தது (லூக். 1:26, 35ஐக் காணவும்).*

*இயேசு மகிமைப்படாதிருந்தபடியால் பரிசுத்த ஆவியானவர் இன்னமும் அருளப்படாதிருந்தார் என்று யோவான் எழுதினார் (யோவா. 7:39). இது இயேசுவானவர் ஏற்கனவே தமது அப்போஸ்தலர்களுடன் பூமியில் இருந்தபோது உரைக்கப்பட்டது. பரிசுத்த ஆவியானவர் இன்னும் அருளப்படாதிருந்தார் என்றால், அவர் இயேசுவில் இருந்து மாறுபட்ட வேறொருவராக இருக்க வேண்டும்.*

*யோவான் 14:16ன்-படி, அப்போஸ்தலர்களுக்கு ''வேறொரு தேற்றரவாளனை,'' பரிசுத்த ஆவியானவரை (யோவா. 14:26) அனுப்புவதாக இயேசு உரைத்தார். இயேசுவே அந்தத் தேற்றரவாளனாயிருந்தால், அவர் எப்படி "வேறொரு" தேற்றரவாளனை அனுப்ப முடியும்? அதுபோலவே, பரிசுத்த ஆவியானவரும் இயேசுவும் ஒரே நபராக இருந்தால், பரிசுத்த ஆவியானவர் எப்படி "வேறொரு தேற்றரவாளனாக" இருக்க முடியும்?*

*"வேறொரு" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள allon என்ற கிரேக்க வார்த்தையானது, பரிசுத்த ஆவி என்பவர் இயேசுவல்ல, ஆனால் இயேசுவைப் போன்ற வேறொரு நபர் என்ற கருத்தை விளக்கப் படுத்துகிறது.* A. T. *இராபர்ட்ஸன் அவர்கள் பின்வருமாறு எழுதினார்,*

> *வேறொரு தேற்றரவாளன் (allon parakleton*). *நமது* Paraclete, *பிதாவுடன் இருக்கும்படிக்கு நமது தேற்றரவாளரான இயேசுவுடன் கூட இருக்கும் வேறொரு* (*allon,* not *heteron*) *நபர், உதவியாளர், பரிந்துரையாளர் (1 யோவா. 2:1. இ.வ. ரோமர் 8:26முதல்).*[4]

*மர்வின்* R. *வின்சென்ட் அவர்கள், allon என்பதைக் குறித்து அது "எண்ணிக்கை வித்தியாசத்தை" வெளிப்படுத்துவதாக எழுதினார்.*[5] *பிற்பாடு அவர், ''eteron என்பதல்ல, ஆனால் allon என்பதே, மாறுபட்ட என்று அர்த்தம் தரும் வேறொரு என்பதாக உள்ளது என்பதைக் கவனியுங்கள். அனுப்பப்படவிருந்த பரிந்துரையாளர் கிறிஸ்துவிலிருந்து மாறுபட்டவர் அல்ல, ஆனால் அவரைப் போன்று இருந்த வேறொருவராவார்''*[6] *என்று எழுதினார்.*

*வில்லியம் ஹென்ரிக்ஸென் அவர்கள், "வேறொரு என்ற வார்த்தை என்னைப் போன்றவரைச் சுட்டிக்காண்பிக்கிறது, அவர் எனது இடத்தை எடுத்துக் கொள்பவராக, எனது பணியைச் செய்பவராக இருக்கின்றார். ஆகவே, இயேசு ஒரு நபராயிருப்பார் என்றால், பரிசுத்த ஆவியானவரும் ஒரு நபராகவே இருப்பார்'' என்று எழுதினார்.*[7] *பரிசுத்த ஆவியானவர், இயேசுவல்ல. அவர், இயேசுவின் இயல்பில் இருந்து மாறுபடாமல், அவரைப் போலிருக்கும் வேறொரு தேற்றரவாளராக (ஆறுதல் அளிப்பவர்) இருக்கின்றார்.*

*இயேசு போகாதிருந்தால் தேற்றரவாளன் அவர்களிடத்திற்கு அனுப்பப் படமாட்டார் என்று இயேசுவே கூறியிருந்தார் (யோவா. 16:7). மேலும், ஆவியானவர் சுயமாய்ப் பேசாமல், இயேசுவினிடத்திலிருந்து கேள்விப் பட்டவைகளைப் பேசுவார் என்றும் இயேசு கூறியிருந்தார் (யோவா. 16:14).*

*இயேசு மற்றும் பரிசுத்த ஆவியானவர் ஆகியோரைப் பற்றிப் புதிய ஏற்பாட்டில் தரப்பட்டுள்ள தகவல்கள், அவர்கள் சுயாதீனமான, தனித் தனியான மற்றும் பரலோகத்திற்குரிய இரண்டு நபர்கள் என்று சுட்டிக் காண்பிக்கின்றன.*

## அவர் தெய்வீகமானவராக இருக்கின்றார்

*பரிசுத்த ஆவியானவர், பிதாவோடும் குமாரனோடும் சமமானவராக, அதே தரநிலை வாய்ந்தவராக குறிப்பிடப்பட்டுள்ளார். மக்கள், பிதா குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற வேண்டியுள்ளது (மத். 28:19). ஆவியானவர், தேவன் ("பிதா"; 1 கொரி. 8:6), மற்றும் கர்த்தர் ("இயேசு"; 1 கொரி. 8:6) ஆகியோர் ஆவிக்குரிய வரங்களைக் கொடுப்பவர்களாக இருக்கின்றனர் (1 கொரி. 12:4-6). அவைகள் ஆவியானவரின் சித்தத்தின்படியே பகிர்ந்து கொடுக்கப்படுவதாகக் கூறப்படுகிறது (1 கொரி. 12:11). இம்மூவரும் ஒரே தரநிலையுடையவர்கள் என்று 2 கொரிந்தியர் 13:14ல் பவுல் குறிப்பிட்டார்: "கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய கிருபையும், தேவனுடைய அன்பும், பரிசுத்த ஆவியினு டைய ஐக்கியமும், உங்கள் அனைவரோடுங்கூட இருப்பதாக."*[8]

*பிதா, குமாரன் மற்றும் பரிசுத்த ஆவியானவர் ஆகியோர், ஒரே விதமான இயல்பைக் கொண்டுள்ள ஆனால் தனித்தனி பரலோக ஜீவிகளாக உள்ளனர் என்பதற்கான புதிய ஏற்பாட்டு ஆதாரம் ஏராளமாக உள்ளது. அவர்கள் ஒருவர் மற்றவருடனான தங்கள் உறவிலும், மனித குலத்திற்கான தங்கள் ஊழியத்திலும் ஒன்றாக இணைந்துள்ளனர்.*

*தெய்வீகத்துவமானவரிடத்தில் மாத்திரம் இருக்கக் கூடிய பண்புகள் பரிசுத்த ஆவியானவருக்குக் குறிப்பிடப்பட்டுள்ளன. அவர், பிதாவோடும் குமாரனோடும் பகிர்ந்து கொள்ளுகின்ற ஐந்து பண்புகளைக் கவனியுங்கள்:*

*1. நித்தியத்துவம்: பின்வருபவை பிதா, குமாரன், பரிசுத்த ஆவி ஆகியோரின் நித்திய இயல்பைப் பற்றிய வேதாகமக் கூற்றுக்களாக உள்ளன: (1) பரிசுத்த ஆவியானவரின் நித்திய இயல்பு: "நித்திய ஆவியினாலே தம்மைத்தாமே பழுதற்ற பலியாகத் தேவனுக்கு ஒப்புக்கொடுத்த கிறிஸ்து வினுடைய இரத்தம் ஜீவனுள்ள தேவனுக்கு ஊழியஞ் செய்வதற்கு உங்கள் மனச்சாட்சியைச் செத்த கிரியைகளறச் சுத்திகரிப்பது எவ்வளவு நிச்சயம்!" (எபி. 9:14); (2) பிதாவின் நித்திய இயல்பு: "உமது சிங்காசனம் பூர்வமுதல் உறுதியானது, நீர் அநாதியாயிருக்கிறீர்" (சங். 93:2); மற்றும் (3) இயேசுவின் நித்திய இயல்பு: "இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவரா யிருக்கிறார்" (எபி. 13:8); "இவ்விதமாய், நம்முடைய கர்த்தரும் இரட்சகரு மாகிய இயேசு கிறிஸ்துவினுடைய நித்திய ராஜ்யத்துக்குட்படும் பிரவேசம் உங்களுக்குப் பரிபூரணமாய் அளிக்கப்படும்" (2 பேது. 1:11).*

*2. எல்லாம் அறிந்த தன்மை (சர்வ ஞானம்): இந்தப் பண்பு பிதா குமாரன் பரிசுத்த ஆவியானவர் ஆகியோருக்கு இருப்பதாக வேதாகமத்தில் பேசப்படுகிறது: (1) பரிசுத்த ஆவியானவர்- "நமக்கோ தேவன் அவைகளைத் தமது ஆவியினாலே வெளிப்படுத்தினார். அந்த ஆவியானவர் எல்லாவற்றை*

*யும், தேவனுடைய ஆழங்களையும், ஆராய்ந்திருக்கிறார்" (1 கொரி. 2:10). (2) பிதாவானவர்- "அவருடைய பார்வைக்கு மறைவான சிருஷ்டி ஒன்றுமில்லை. சகலமும் அவருடைய கண்களுக்கு முன்பாக நிர்வாணமும் வெளியரங்கமுமாயிருக்கிறது, அவருக்கே நாம் கணக்கு ஒப்புவிக்க வேண்டும்" (எபி. 4:13); மற்றும் (3) இயேசு- "அப்படியிருந்தும், இயேசு எல்லாரையும் அறிந்திருந்தபடியால், அவர்களை நம்பி இணங்கவில்லை. மனுஷருள்ளத்திலிருப்பதை அவர் அறிந்திருந்தபடியால், மனுஷரைக் குறித்து ஒருவரும் அவருக்குச் சாட்சி கொடுக்க வேண்டியதாயிருக்க வில்லை" (யோவா. 2:24, 25).*

*3. சர்வ வல்லமை: பிதா குமாரன் பரிசுத்த ஆவியானவர் ஆகியோருக்கு இந்தப் பண்பு இருப்பதாக, பல வேத வசனப் பகுதிகள் குறிப்பிடுகின்றன: (1) பரிசுத்த ஆவியானவர் - "பரிசுத்த ஆவி உன்மேல் வரும், உன்னதமானவருடைய பலம் உன்மேல் நிழலிடும்" (லூக். 1:35ஆ); "பின்பு இயேசு ஆவியானவருடைய பலத்தினாலே கலிலேயாவுக்குத் திரும்பிப் போனார்" (லூக். 4:14அ); "பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து" (அப். 1:8அ); (2) தேவன் - "தேவனாலே கூடாத காரியம் ஒன்றுமில்லை" (லூக். 1:37); மற்றும் (3) இயேசு - "வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது" (மத். 28:18).*

*4. சர்வ வியாபகம் (எங்கும் நிறைந்த தன்மை): இந்தப் பண்பு பிதா குமாரன் பரிசுத்த ஆவியானவர் ஆகியோருக்கு நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது. (1) பரிசுத்த ஆவியானவர் - "உம்முடைய ஆவிக்கு மறைவாக எங்கே போவேன்?" (சங். 139:7அ); (2) பிதாவானவர் - "தேவன் மெய்யாக பூமியிலே வாசம்பண்ணுவாரோ? இதோ, வானங்களும் வானாதி வானங்களும் உம்மைக் கொள்ளாதே" (1 இரா. 8:27அ); "யாவனாகிலும் தன்னை நான் காணாதபடிக்கு மறைவிடங்களில் ஒளித்துக் கொள்ளக் கூடுமோ என்று கர்த்தர் சொல்லுகிறார், 'நான் வானத்தையும் பூமியையும் நிரப்புகிறவர் அல்லவோ' என்று கர்த்தர் சொல்லுகிறார்" (எரே. 23:24); மற்றும்; (3) இயேசு - "இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன்" (மத். 28:20ஆ).*

*5. சிருஷ்டிக்கும் வல்லமை: தேவத்துவத்தின் ஒவ்வொரு உறுப்பினருமே சிருஷ்டிகரென்று வேதாகம வசனப்பகுதிகள் சித்தரிக்கின்றன: (1) பரிசுத்த ஆவியானவர் - "தேவ ஆவியானவர் ஜலத்தின் மேல் அசைவாடிக் கொண்டிருந்தார்" (ஆதி. 1:2)[9]; (2) பிதாவானவர் - "அவன் பூமியைத் தமது வல்லமையினால் உண்டாக்கி, பூச்சக்கரத்தைத் தமது ஞானத்தினால் படைத்து, வானத்தைத் தமது பேரறிவினால் விரித்தார்" (எரே. 51:15); மற்றும்; (3) குமாரன் - "ஏனென்றால் அவருக்குள் சகலமும் சிருஷ்டிக்கப்பட்டது. பரலோகத்திலுள்ளவைகளும் பூலோகத்திலுள்ள வைகளுமாகிய காணப்படுகிறவைகளும் காணப்படாதவைகளுமான சகல வஸ்துக்களும், சிங்காசனங்களானாலும், கர்த்தத்துவங்களானாலும், அதிகாரங்களானாலும், சகலமும் அவரைக்கொண்டும், அவருக்கென்றும் சிருஷ்டிக்கப்பட்டது" (கொலோ. 1:16).*

## முடிவுரை

*பரிசுத்த ஆவியானவர், தெய்வீகத்துவமானவருக்கு மாத்திரமே நடைமுறைப்படுத்தப்படக்கூடிய சொற்றொடர்களைக் கொண்டு விவரிக்கப்பட்டுள்ளார். இந்தச் சொற்றொடர்களில் இருந்து நாம், பரிசுத்த ஆவியானவர் பிதாவோடும் குமாரனோடும் தெய்வீக இயல்பைப் பகிர்ந்து கொள்கின்றார், மற்றும் பிதாவுடனும் குமாரனுடனும் ஒன்றுகவே இருக்கின்றுர், ஆனாலும் அவர் ஒரு தனிப்பட்ட ஆளுமைத்துவம் உடையவராய் இருக்கின்றார் என்று முடிவு செய்ய இயலும். அவர் வேதாகமத்தில் ஒரு முக்கியமான மையத்துவமான நபராக இருக்கின்றார்.*

---

*குறிப்புகள்*

[1]Emmet Russell, "Holy Spirit," *The New International Dictionary of the Bible*, eds. J. D. Douglas and Merrill C. Tenney (Grand Rapids, Mich.: Zondervan, 1987), 447. [2]James Oliver Buswell Jr., "Spirit," *The New International Dictionary of the Bible*, eds. J. D. Douglas and Merrill C. Tenney (Grand Rapids, Mich.: Zondervan, 1987), 961. [3]Guy N. Woods, *A Commentary on the Gospel According to John* (Nashville: Gospel Advocate Co., 1984), 63. [4]Archibald Thomas Robertson, *Word Pictures in the New Testament*, vol. 5 (New York: Harper & Brothers, 1932), 252. [5]Marvin R. Vincent, *Word Studies in the New Testament*, vol. 2 (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1946), 47. [6]Ibid., 244. [7]William Hendriksen, *Exposition of the Gospel According to John*, New Testament Commentary (Grand Rapids, Mich.: Baker Book House, 1972), 275. *[8]மத். 3:16, 17; யோவா. 3:34; 14:26; 15:26; 16:15; ரோமர் 14:17, 18; 15:16; 1 கொரி. 6:11; 2 கொரி. 3:3; கலா. 4:6; எபே. 2:18, 20-22; 4:4-6; 5:18-20; 2 தெச. 2:13; எபி. 9:14; 1 பேது. 1:2; யூதா 20, 21 ஆகிய வசனங்களைக் காணவும். [9]சிருஷ்டிப்பில் பரிசுத்த ஆவியானவர் உதவினார் என்பதைக் காண்பிக்கச் சிலரால் மற்ற வேத வசனப்பகுதிகளும் பயன்படுத்தப்படுகின்றன; இருப்பினும், இவைகள் திடமான ஆதாரத்தில் குறைவுபடுபவைகளாகக் காணப்படுகின்றன. பெரும்பாலான மொழிபெயர்ப்புகளில், யோபு 26:13ம் வசனத்தில் சிருஷ்டிப்புக்கு நடைமுறைப் படுத்தப்படக் கூடிய கூற்று ஒன்று இருப்பதில்லை. மொழிபெயர்ப்புக்களைப் பொறுத்தமட்டில் இதே விஷயமானது, யோபு 27:3; ஏசா. 40:12, 13; சங். 33:6 ஆகியவற்றிற்கும் உண்மையானதாக உள்ளது, இவ்வசனப்பகுதிகள், ஆவியானவர் படைப்பில் உதவினார் என்பதற்கு ஆதாரமாகச் சிலவேளைகளில் பயன்படுத்தப்பட்டுள்ளன. சங்கீதம் 104:30, தொடக்க காலச் சிருஷ்டிப்பை அல்ல ஆனால் ஒரு புதுப்பித்தலை கவிதைத்துவமாக மாத்திரம் குறிப்பிடுவதாக இருக்கலாம்.*